மூன்றாவது ப்ரக்மதந்த்ர ஸ்வதந்தர

ஜீயர் அருளிச்செய்த

# வாழித்திருநாமம்.

பொய்கையார்

ஐப்பசியில்திருவோணத்து அவதரித்தான்வாழியே.
அழகமர்ந்தகச்சிநகர் சிறக்கவந்தோன்வாழியே.
அற்புதமாநல்வையந் தகளிசெய்தான்வாழியே.
ஆர்வமிகுவார்கடலா நெய்யிட்டான்வாழியே.
நற்பதத்துக்கதிரவனே வளக்கமென்றான் வாழியே.
நம்பொருட்டாலந்தாதி நூறளித்தான்வாழியே.
பொற்பதத்துச்சோதிதனைக் கண்டுரைத்தான்வாழியே.
பொய்கைமுனியடியிணையும் வடிவழகும்வாழியே.

பூதத்தார்

அன்பேதகளியா விளக்கநின்றான்வாழியே.
ஆர்வத்தைநெய்யாக்கி அளித்தபிரான்வாழியே.
இன்புருகுசிந்தையிடு திரியிட்டான்வாழியே.
இயல்ஞானச்சுடர்விளக்கை யெரித்துவைத்தான்வாழியே.
அன்பேதகளிநூறும் அருள்செய்தான்வாழியே
ஐப்பசியிலவிட்டதில் சகத்துதித்தான்வாழியே.
இன்புகழ்சேர்கடன்மல்லை யவதரித்தான்வாழியே.
எங்கள்வைப்பாம் பூதத்தாரிணையட்கள்வாழியே.

பேயார்

திருப்பொலிந்தமாமயிலை நகருதித்தான்வாழியே.
சீரைப்பசிச்சதயம் சிறந்தவள்ளல்வாழியே.
நெருக்கமுடனிடைகழியில் நின்றபிரான்வாழியே.
நேசத்தால்திருமாலின் வடிவுகண்டான்வாழியே.
திருக்கண்டேநூறுசொன்ன செல்வத்தோன்வாழியே.
சீராழிவண்ணனையே தெய்வமென்றான்வாழியே.
பெருக்கமிகுமழிசையார்கோன் ஏத்தநின்றான்வாழியே.
பெருநிலத்தில் பேயாழ்வாரிணையடிகள்வாழியே.

திருமழிசையாழ்வார்

நான்முகனைப்படைத்தவன் நாரணனென்றான்வாழியே.
நான்முகற்குச்சங்கரன்தான் மகனென்றான்வாழியே.
நான்முகந்தொண்ணூற்றாறு நன்களித்தான்வாழியே.
நல்தரஞ்சூழ்திருமழிசை யமருமவன்வாழியே.
தேன்குணனாய்தைமகத்தில் வந்துதித்தான்வாழியே.
திருச்சந்தம்நூற்றிருபதீந்த பிரான்வாழியே.
வான்பொருளாமாதவனே பரனென்றான்வாழியே.
மழிசையர்க்கோன்மதுமணங்கொள் மலரடிகள்வாழியே.

நம்மாழ்வார்

மன்னுபுகழ்த் திருவிருத்தம் நூறுசொன்னான்வாழியே.
மால்பாதத்தாசிரியம் ஏழளித்தான் வாழியே.
முன்னுமந்தாதி பதிற்றெட்டேழீன்றான் வாழியே.

முந்தைஆயிரமறையை மொழிந்தவள்ளல்வாழியே.
கன்னிமதிள்திருக்குருகூர் வந்தபிரான் வாழியே.
காசினிவைகாசி விசாகத்துதித்தான்வாழியே.
மன்னுபொருள்நால்வேதம் தமிழ்செய்தான்வாழியே.
மகிழ்மணக்கும்குருகையர்க்கோன் மலரடிகள்வாழியே.

## மதுரகவியார்

பொய்த்தபொழில்திருக்கோளூர் வந்தவள்ளல்வாழியே.
முன்புதாம்அருணன்போல் உதிக்குமவன்வாழியே.
சித்திரையில்சித்திரைநாள் சிறக்கவந்தோன்வாழியே.
சிறப்புடையபதினொன்று செய்தளித்தான்வாழியே.
வைத்தநிதிப்பராங்குசனையே யுரைத்தான்வாழியே.
வையகத்தில்ஆசிரியன் பரனென்றான்வாழியே.
சித்திரமாய்த்தென்கதிரோன் காணவந்தான்வாழியே.
சீர்மதுரகவியார்தம் மலரடிகள்வாழியே.

## குலசேகரர்

அஞ்சனமாமலைப்பிறவி சிந்திப்போன்வாழியே.
அருண்மாசிப்புநர்பூசத் தவதரித்தான்வாழியே.
அஞ்சுடர்சூழ்திருமணத்தூண டைந்தபிரான்வாழியே.
அணியரங்கனடியார்க்கே யாட்பட்டான்வாழியே.
செஞ்சாலிமிகுவஞ்சி நகர்வந்தான்வாழியே.
திருமொழிநூற்றைந்து செய்யுள்செப்பினான்வாழியே.
வஞ்சமறஅடியார்க்காய்ச் சபதமிட்டான்வாழியே.
வஞ்சியர்கோன்மலர்பதங்கள் மாநிலத்தில்வாழியே.

## விஷ்ணுசித்தர்

திருப்பல்லாண்டென மாலைப்பாடினான்வாழியே.
செஞ்சொல்நானூற்றெழுபத்து மூன்றுரைத்தான்வாழியே.
பெருக்கமுறுமானிதனில் சோதிவந்தான்வாழியே.
பெருமைமிகும்ஆண்டாளைப் பெற்றபிரான்வாழியே.
மருப்பொசித்தமாதவனே பரனென்றான்வாழியே.
மாசறப்பாண்டியனவையில் கிழியறுத்தான்வாழியே.
விருத்திபெறுவில்லிபுத்தூர் விளங்கவந்தான்வாழியே.
விட்டுசித்தன்மலர்ப்பதங்கள் மேதினியில்வாழியே.

## ஆண்டாள்

கலமுடன் வில்லிபுத்தூர் விளங்கவந்தாள் வாழியே.
காரார் நற்றுழாய்க்கானத் தவதரித்தாள் வாழியே.
விமலமாம் திருவாடிப் பூரத்தாள் வாழியே.
விட்டுசித்தன் வளர்த்தெடுத்த இளங்கிழையாள் வாழியே.
அமலத் திருப்பாவை ஐயாறுஅளித்தருள்வாள் வாழியே.
ஆகநூற்றெண்ணைந்து மூன்றுரைத்தான் வாழியே.
அமுதனாம் அரங்கனுக்கே மாலையிட்டாள் வாழியே.
ஆண்டாள்தம் இணையடிகள் அனவரதம் வாழியே.

## தொண்டரடிப்பொடியார்

மன்னுமதிள்திருமண்டங்குடி வந்தான்வாழியே.
மார்கழியில்நல்கேட்டை வந்துதித்தான்வாழியே.
தென்னரங்கரடியிணையே பற்றிநின்றான்வாழியே.
திருமாலைஐயொன்ப தருளினான்வாழியே

துன்னுபுகழ்த்திருப்பள்ளியெழுச்சி சொன்னான்வாழியே.
தொல்புகழ்சேரன்பர்க்கே தொண்டுகொண்டான்வாழியே.
தொன்னகரில்பொன்பாவைக் களித்தபிரான்வாழியே.
தொண்டரடிப்பொடியாழ்வார் துணையடிகள்வாழியே.

## திருப்பாணர்

எம்பெருமானுறையூராரேத்த வந்தோன்வாழியே.
ஏற்றகார்த்திகையில் உரோகிணியுதித்தான்வாழியே.
அம்புவியிலரங்கருகுக் கண்டுகந்தான்வாழியே.
அகமகிழ்ந்தேஅவர்புகழ நின்றுயர்ந்தோன்வாழியே.
அம்புயநேர்தாண்முனிதோள் வைத்திட்டான்வாழியே
அமலனாதிப்பிரான்பத்து அருள்செய்தான்வாழியே.
பைம்பொழில்சூழ்திருவரங்கந் திகழ்ந்தபிரான்வாழியே.
பாண்பெருமாள்பங்கயத்தாள் பார்தன்னில்வாழியே.

## திருமங்கைமன்னன்

கார்த்திகையில் கார்த்திகைநாள் களிக்கவந்தோன்வாழியே.
காசினியில்திருக்குறையல் அவதரித்தான் வாழியே.
சார்த்த திருமொழிதன்னைச் சாதித்தான் வாழியே.
தாண்டகமோரிரண்டெமக்குத் தந்தவள்ளல் வாழியே.
ஏர்த்தஎழுகூற்றிருக்கை இருமரலோன்வழியே.
இம்மூன்றில் நூற்றுப்பத்தொன்பதுளான் வாழியே.
வார்த்தபுகழ் குமுதவல்லி மணவாளன் வாழியே.
மங்கையர்கோன் மலர்பதங்கள் வாழியே.

## எம்பெருமானார்

சீராரும் பெரும்பூதூர் சிறக்கவந்தோன்வாழியே.
சித்திரையில் ஆதிரைநாள் செகத்துதித்தோன்வாழியே.
ஆராதவருளாளர் அருளுடையோன்வாழியே.
அருமறைசொல்பெரியநம்பி அடிபணிந்தான்வாழியே.
ஏராரும் பாஷியத்தை யீன்றபிரான்வாழியே.
எழுபத்துநால்வரையும் எமக்களித்தான் வாழியே.
ஓராதபரசமயக்குறுபறுத்தான் வாழியே.
ஒளிதிகழுமெதிராசர் இணையடிகள் வாழியே.

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்